Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியை உள்நாடு

மலர் 31 | விளம்பி ஆவணி 1958 ஆகஸ்டு | இதழ் 8

இரு பெருஞ் சான்றோர்

(ஆசிரியர்)

முன்னுரை

சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றிய சான்றோர்கள் பலருள், சோமசுந்தர நாயகர், சபாபதி நாவலர் என்னும் இரு பெருஞ் சான்றோர்களும் குறிப்பிடத்தக்க பெருஞ் சிறப்புடையவர்கள் ஆவர். அவ்விரு பெரு மக்களையும் அண்மைக் காலத்தில் நமது "பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற புண்ணியக் கண் இரண்டு" எனக் கூறி நாம் பெரிதும் மகிழலாம். "முதிர் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும் கதிர் ஒருங்கிருந்த காட்சி போல" இவ்விருவரும் ஒருகாலத்தினராய் உற்றினிது வாழ்ந்து, சிவநெறிக்கும் செந்தமிழ்க்கும் செய்தருளிய தொண்டுகள் பற்பலவாகும்.

சோமசுந்தர நாயகர் அவர்கள் சென்னை நகரிற் சூளை என்னும் பகுதியின்கண் வாழ்ந்து வந்தவராவர் (1846—1901). சேதுபதி மன்னர் அவர்களால் "சைவ சித்தாந்த சண்ட மாருதம்" என்னும் சிறப்புப் பட்டம் இவர்க்கு நல்கப் பெற்றது. சித்தாந்த சேகரம், சித்தாந்த பூஷணம், சிவாதிக்ய ரத்நாவளி, சிவபாரம்யப் பிரதரிசினி, சைவ சூளாமணி, ஆசார்யப் பிரபாவம், ஆபாச ஞான நிரோதம், மெய்கண்ட சிவதூஷண நிக்ரகம் முதலிய பலப்பல அரும்

பெரும் நூல்கள் இவரால் இயற்றப் பெற்றன. தமிழ் தெலுங்கு வடமொழி ஆங்கிலம் என்னும் மொழிகளை நன் கினிது கற்றுத் தேர்ந்தவர் இவர். ஆசிரியர் **மறைமலை அடிகளார்** இவர்தம் அரும்பெறல் மாணவர்களுள் ஒருவர் எனின், இவர்தம் சீரும் சிறப்பும் இனைய

நாயகர்

வென எண்ணி யுணரலாம். "திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை" என்னும் நூலின்கண், "ஒருவா யாணர் மருவுறு சென்னைத் - தவம் பெறத் தோன்றி நவையறு தமிழும் - வடநூற் பரப்பும் நிலைகண் டுணர்ந்தாங் - குள்ளுறை கருவாய்த் தெள்ளொளி விரிக்கும் - சைவ சித்தாந்த முடிபொருள் எடுத்தீங்கு - அறங்கரை நாவிற் றிறம்பட விளக்கிப் - புறம்படு சமயப் பொய்ப்பொருள் நூறி - நலங்கிளர் தன்மையும் புலங் கொளாக் காட்சியும் - இயைந்தொருங் கீண்டிய அமை யாப் பெருமைச் - சோம சுந்தரத் தோமறு குரவன்" என மறைமலை அடிகளார் இவர்தம் மாட்சிமைகள் பலவும் விதந்தெடுத் துரைத்து வழுத்தி யிருத்தல் காணலாம். இவர் பெயரால் "சோமசுந்தரக் காஞ்சி ஆக்கம்" எனப் பிறிதொரு நூலும் அடிகளாரால் இயற்றப் பெற்றுள்ளதோடு, 'சைவ சித்தாந்த ஞான போதம்' என்னும் வேறொரு நூலும் அடி களால் இவர்தம் நினைவுக்குறியாக வகுக்கப்பட் டுள்ளது.

சபாபதி நாவலர் அவர்கள் (1845—1903) யாழ்ப் பாணத்து வடகோவையில் தோன்றி யருளியவர். தமிழ் வடமொழி ஆங்கிலம் என்னும் மொழிகளிற் புலமை நிரம் பியவர். திருவாவடுதுறை யாதீனத்து ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்களால் **நாவலர்** என்னும் சிறப்புப் பட்டம் இவர்க்கு வழங்கப்பட்டது. சிதம்பர சபாநாத புராணம், சிவகர்ணாமிர்தம், பாரத - இராமாயண - சதுர் வேத தாற்பரிய சங்கிரகங்கள், திருச்சிற்றம்பல யமக அந்தாதி, திருவிடைமருதூர்ப் பதிற்றுப்பத் தந்தாதி, திரா விடப் பிரகாசிகை முதலிய பல நூல்களை

நாவலர்

இவர் இயற்றி யுள்ளார். '**ஞானாமிர்தம்**' என் னும் செந்தமிழ் இதழ் ஒன்றும் இவராற் சில காலம் நடத்தப்பெற்றது. 'திருமந்திரம்' பதிப்பித்த **மாவை-விசுவநாத பிள்ளை** அவர்களும், 'மொழிநூல்' இயற்றிய **மாகறல்-கார்த்திகேய முதலியார்** அவர்களும், இவர்தம் மாணாக்

கர்கள் பலருள்ளே குறிப்பிடத் தக்கவர்கள் ஆவர். "சீர் பரவும் புவித்தருக்கும் புலவர்களுக் கெல்லாமோர் சிங்கம் போல்வான்" "வாய்ந்த பெருந்தவம் மருவுஅம் முனிவரன் போல் உரையெழுதும் வலிமை யாளன்" "ஆகம நூல் ஆய் விநோதன்" "நாவலர்ஏறு" என்றெல்லாம் பலரா லும் பாராட்டப் பெற்ற பல்கலைக் குரிசில் இவர்.

நாவலர் அவர்களும் நாயகர் அவர்களும், சைவமும் தமிழும் தழைக்கத் தொண்டாற்றுதற்கண் ஒத்த கருத்தும் உணர்ச்சியும் மிக்குடையவர்களாய் விளங்கினராயினும், சிற்சில செய்திகளில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் கொண்டவராய் விளங்கினர். அவற்றின் பொருட்டு ஒருவரை ஒருவர் மறுத்து நூல் கள் எழுதி இகலி நின்றனர். அவ்விகல் மிகுதியால் ஒரோவழி ஒருவரை யொருவர் வரம்பிகந்து பழித்துக் கொண்டனர் எனவும் தெரிகின்றது. அப் பகுதிகள் சில நமக்கு இப்போது ஒரு சிறிது சுவைக் குறைவாகத் தோன்றுமெனினும், அவர்தம் கருத்து வேறு பாடுகள் சிலவற்றினை மட்டுமாதல் ஈண்டு உணர்ந்து கொள்ளுதல் நம்மனோர்க்குச் சுவையும் நலமும் பயப்ப தாகும் :—

கருத்து வேற்றுமைகள்

(1) "தேவர் குறளும் திருநான் மறைமுடிவும் மூவர் தமிழும்" என வரும் ஔவையார் பாடலில் 'முனி' என்று சுட்டப் பெற்றவர் **மாணிக்கவாசகர்** என்பது நாவலர் கருத்து. ஆயின், ஆண்டு 'முனி' என்றது **வேதவியாதர்** என்பதும், 'மொழி' என்றது **வேதாந்த சூத்திரம்** என்பதும் நாயகர் கருத்து. வியாத நூல் ஏகான்ம வாதம் நுவலுவது என்று சித்தாந்தப் பிரகாசிகையினும் சிவஞான மாபாடியத்தும், சர்வான்மசம்பு சிவாசாரியாரும் ஆசிரியர் சிவஞான யோகிகளும் கூறுதலின், அதனைத் தேவர் குறள் முதலிய வற்றுடன் ஒருங்கெண்ணுதல் பொருந்தாது என்பது நாவலர் அவர்கள் கூற்று. ஆனால் "**முனிமொழிப் பிரகாசிகை**" என்னும் நூலின்கண் நாயகர் அவர்கள், சிவஞான யோகிகளும் சர்வான்ம சம்பு சிவாசாரியரும் "மாயாவாதநூல் செய் தான் வியாதன்" என்றதே யன்றி, வேதாந்த சூத்திரம் மாயாவாதம் போதிப்பதென்று யாண்டும் ஓதிற்றிலர் என்பர். நீலகண்டர் பண்டிதாராத்தியர் இராமாநுசர்

ஆனந்த தீர்த்தர் போன்ற பலர் வேதாந்த சூத்திரத்திற்கு உரை வகுத்திருத்தலின், சங்கரர் உரை கண்டமை ஒன்றே கொண்டு, அதனை மாயாவாதநூல் என்றல் அமையாது எனவும் ; அது சைவ சித்தாந்தச் சார்பான நூலே என்பது தீபா (Thibaut) என்னும் மேலைநாட்டறிஞரின் பதிப்புரையால் தெள்ளிதிற் புலனும் எனவும் கட்டுரைப்பர் நாயகர்.

(2) ஆளுடைய பிள்ளையார் உருத்திர சன்மனார் உக்கிர பாண்டியனார் போல்வாரோர் அபா சுப்பிரமணியர் என்பதும், அவர் தாய் வயிற்றின்கண் கருவுற்று உருத்தெரிய வந்து தோன்றியவரே என்பதும் நாவலர் கொள்கை. ஆளுடைய பிள்ளையார் மாதா வுதரத்தில் தங்கி யிருந்தார் என்றுவது, யோனி வாய்ப்பட்டுப் பிறந்தார் என்றுவது, அல்லது அவர் குமாரக் கடவுள் அல்லர் என்றுவது கற்றறிந்த மேலோர் கருதவும் செய்யார் என்பது நாயகர் அவர்களின் வழக்கீடு.

" காழிநகர் வந்தருளும் கண்மணியைப் பசுவாகக் கழறு வாரைப்
பாழியுளச் சமண்குண்டப் பதிதரெனக் கூறுதலே பான்மையாமால்"

" மண்முகத்தில் எழிற்சிற்றம் பலநாடி
அருணகிரி வள்ள லாதி
பண்முகத்த மொழிப்புலவர் சம்பந்தப்
பெருமானைப் பாடி எங்கள்
சண்முகத்துப் பெருந்தகையே என்றுதுதி
கூறியருள் சார்ந்தார் இன்று
கண்முகத்தில் லாக்குருடர் போன்றுசிலர்
வாதாடிக் கலங்கி ஞரே "

" பொருட்பயன் காணர் புன்மையே பேணிப்
புலம்புவார் உரைப்பினும் கேளார்
பொய்கொளும் அபா சுப்பிர மணியர்
புதுமையே பேசிநாண் இழப்பார் "

(3) ஆளுடைய பிள்ளையார் என்பது ஆளப்படுதலுடைய பிள்ளையார் என்று பொருள் விரிக்கப்படும். பரமசிவனே கந்தசுவாமியாக விளங்குதலின், அக்குமாரசுவாமியோடு பிள்ளையார்க்கு வேறுபாடு தெரிப்பார் ஆளுடைய பிள்ளையார் என அங்ஙனம் பிறிதின் இயைபு நீக்கும்

விசேடணம் அடுத்து ஓதி யருளினர் என்பது நாவலர் விளக்கம். ஆனால் நாயகர் அவர்களோ, சமய குரவர்களின் பரத்துவ நிலையைச் சிறப்பித்துக் குறிப்பிடுதற் பொருட்டே ஆளுடைய பிள்ளையார், ஆளுடைய அரசுகள், ஆளுடைய நம்பிகள், ஆளுடைய அடிகள் என்னும் திருப்பெயர்கள் வழங்கா நிற்கவும், அவற்றின் அருமையையும் பெருமையையும் தெளிந்திடாதார், ஆளுடையார் என்பதற்குச் சிவனால் ஆட்கொள்ளப்பெற்றவர் என்று பொருள்கூறிமயங்குவர் சிலர்; அறுபத்துமூவரும் சிவபிரானால் ஆட்கொள்ளப் பெற்றவரேயாக இந்நால்வருக்கு மட்டும் அவ்விசேடம் வந்து பொருந்துமாறு என்னை? ஆட்கொள்ளப் பெற்றவரை யெல்லாம் ஆளுடையார் எனச் சேக்கிழார் கூறுமையால், உலகத்தை ஆளும் தன்மையுடையார் என்பதே செம்பொருளாகும் என வலியுறுத்தி; " இலக்கணம் அறியார் இலக்கியத் தேர்ச்சி எய்திலார் எட்டுணையேனும், எண்ணுவர் தாமே முற்றுணர்ந் தவராய் ஏழைநா வலர்கள்தாம் என்னே !" என இகழ்ந்துரைத்து இரங்குவர்.

(4) சபாபதி நாவலர் அவர்கள் சிவஞான சுவாமிகள் பாற் பெரிதும் ஈடுபாடு உடையவர். நாயகர் அவர்கள் ஞானசம்பந்தர்பாற் பெரும்பத்திமை வாய்ந்தவர். ஆதலால் நாவலர் அவர்கள் திருஞான சம்பந்தரோடு சிவஞான சுவாமிகளை ஒப்பிட்டுச் சேர்த்துப் பேசியமை குறித்து நாயகர் பின்வருமாறு இரங்கிக் கூறியுள்ளார்.

அவஞானம் தெறக்காழி வரும்அமல வாழ்வினைஎம் அரசை அன்று
சிவஞானம் குழைத்தம்மை தாஞானப் பாலுண்ட தெய்வ வாழ்வைத்
தவஞானப் படிவத்தெம் தனிமுதலைத் துறைசைவளர் தம்பி ராணும
சிவஞான முனிவரோடுசேர்த்துரைப்பார் அவர்பாவம் செப்பொணாதே.

(5) இனி, நாயனர் - சுவாமிகள் என வழங்கும் சொற்கள்பற்றியும் இவ்விருவர்க்கு மிடையே கருத்து வேற்றுமை இருந்தது எனத் தெரிகின்றது. 'மூவர் முதலிகளை நாயனார் என்று வழங்குவது வேண்டும் என்பது ஈழ நாட்டவர் இப்போது எடுத்துக் கொண்ட புதுவழக்கு.' சேக்கிழார் பெருமான் சிவபெருமானை நாயனார் எனப் பல இடங்களிற் கூறியிருப்பது செய்யுள் வழக்கின் மட்டுமே சிறந்திடும்.

அடிமைத் திறம் செய்து உயர்ந்தவர்களுக்கும், அடிமைத் திறத்தை இனிது காட்டி உலகத்தை உய்வித்தவர்களுக்கும் பேதம் தோன்றவே அறுபத்து மூவரைச் செய்யுள் வழக்கோடு ஏனை வழக்கினும் நாயனார் என்று வழங்குதலும், ஆசாரியர்களைச் செய்யுள் வழக்கின் மாத்திரமே நாயனார் என்று வழங்குதலும் மேலோர்கட்கு ஒப்பாயிற்று. இவ்வுண்மையைத் தெளிந்தோர் ஆசாரியர் நால்வர்களையும் சுவாமிகள் என்றே வழங்குவர் என்பது நாயகர் அவர்களின் கூற்று.

(6) நாயகர் அவர்களுக்கும் நாவலர் அவர்களுக்கும் பெரிதும் கருத்து வேற்றுமையை விளைவித்தது "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" எனவரும் பெரியபுராணப் பாடலே யாகும்.

"சிவனடியே எனும்பனுவற் பொருள்சிதைய இருஞானம் செப்பிஎங்
தவமுதல்வர் சம்பந்தர் தமைச்சாமு சித்தர்எனச் சாற்றி நீடு [கள்
பவம்பெருக்கி ஞாயமொரு சிறிதுமுண ரார்நிந்தை படிப்பார் தீமை
உவர்தெரிவாய் நிரயமுமி ழாதவரை எஞ்ஞான்றும் உண்மை தானே"

என வரும் நாயகர் பாடல் இதனை உணர்த்துவதாகும். ஞானம் இரு வகைத்து என்பது நாவலர் கருத்து. நான்கு வகைப்படும் என்பது நாயகர் கருத்து. "உயர் ஞானம் இரண்டாம்; மாறு மலம் அகல அகலாத மன்னு போதத் திருவருள் ஒன்று; ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம் என்று உலகறியச் செப்பும் நூலே" என்பது முன்னைய கொள்கைக்கும், "கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம்" என்பது பின்னைய கொள்கைக்கும் சான்றாகும். இவ்விரு திறக் கொள்கைக்கும் பொருள் முடிவின்கண் வேறுபாடு பெரிதும் இன்றாயினும், தத்தம் கருத்தை வலியுறுத்தற்கு, நாவலர் அவர்களால் ஞானசூடாமணி என்னும் நூலும், நாயகர் அவர்களால் ஞானபேத விளக்கம், ஞானபேதத் தெளிவு, ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க நியாய ரக்ஷாமணி எனப் பல நூல்களும் இயற்றப் பெற்றன என அறிகின்றோம். இன்னோரன்ன சுவைமிகு செய்திகள் பல.

சபாபதி நாவலரும் சோமசுந்தர நாயகரும் மிகச் சிறந்த பேரறிஞர்கள் ஆவர். பலகலைகளிலும் மொழிகளி

லும் தேர்ச்சி பெற்று, நுண்மாண் நுழைபுலம் சான்ற பெரு மக்கள் அவர்கள். இத்தகைய பெருமக்களின் வரலாற்றுச் செய்திக் குறிப்புக்களை யெல்லாம் தெரிந்து வைத்துக் 'கொள்ளுதல் நம்மனோர்க்குப் பெரு நலங்கள் பல பயப்பன வாகும். அளவை நெறி பிறழாமல் அவர்கள் இயற்றி யளித்துள்ள வழக்கீட்டு மறுப்புரை நூல்கள் அறிவிற்கு விருந்தாக மிளிர்தலோடு, சென்ற நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சித் திறங் களையும், தமிழகச் சூழ்நிலைகளையு மெல்லாம் உணர்ந்து கொள்ளுதற் குரிய உறுபெருங் கருவிகளாகவும் பேருதவி செய்யும்! எளிய பொது மக்களுக்கு அவை ஒருகால் வேண்டப்படுவன அல்லவாயினும், அறிவாராய்ச்சித்துறை களில் ஈடுபட்டு இன்பம் துய்த்து "நூலாருள் நூல்வல்லார்" எனத் திகழ விரும்பும் தக்கார் அனைவர்க்கும் அவைகள் பெரிதும் வேண்டியனவாம் என்பது ஒருதலை. ஆனல், அந்தோ! அந்நூல்களெல்லாம் இந்நாளிற் " பேரும் அறிந் திலேன் என்செய்குவேன் இந்தப் பேதையனே" என வருந்திப் புலம்பும் நிலையில் மறைந்து வருகின்றன. அவற் றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டுவது நம்மனோர் அனை வர்க்கும் கடமை ஆகும்.

முடிவுரை

சொல்லார் புகழ்ச்சோம சுந்தர நாயகரும்
நல்லார் சபாபதி நாவலரும்—வல்லாராய்த்
தம்முள் மறுத்தியற்றும் சைவத் தமிழ்நூல்கள்
மெய்ம்மைஉணர் விற்காம் விருந்து. —முருகவேள்

திருநாவுக்கரசு சுவாமிகள்

வாழ்க்கை வரலாற்றுண்மை

(சித்தாந்தப் பிரசங்காமிர்தம் - பூ. சமரபுரி முதலியார்)

மக்களாகப் பிறந்தவர்கள் தம் வாழ்க்கையை நலமுறப் பண்படுத்திக் கொண்டு நல்லதோர் உண்மையைக் கடைப் பிடித்து முடிவிற் சிறந்த பயனை அடையவேண்டும். அதற் 'காகத் தம் முன்பு வாழ்ந்த பெரியார்கள் வாழ்க்கை வரலாற் றைப் படித்து உணர்ந்து கூடியவரையில் அவர்கள் மேற்

கொண்ட வழிதுறைகளைப் பின்பற்றி நடக்க முயலல் வேண்டும்.

உலகத்தில் வாழ்ந்த பெருமக்கள் ஒவ்வொருவர் ஒவ்வொரு துறையில் மேம்பட்டு விளங்கினார்கள். தமக்கும் பிறர்க்கும் பயன்பட வாழ்ந்தார்கள். ஒவ்வொரு குறிக்கோளை உடையவராய் அதைக் கடைபோகச் சாதித்துப் பெரும்பயன் அடைந்தார்கள்.

குறிக்கோள் இல்லாத வாழ்வு பயனற்றதேயாகும். “குறிக்கோள் இலாது கெட்டேன்” என்கிறார் அப்பர் அடிகள். இந்த ஒரு நன்மொழியே அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கற்றுணர மக்களுக்குத் தூண்டுகோல் ஆகும்.

குறிக்கோள் என்ற மாத்திரத்தில் அவசரப்பட்டு யாரையும் எதையும் நன்றாக ஊன்றிச் சிந்தியாது பின்பற்றி விடக்கூடாது. நல்ல குறிக்கோளாக இருக்கவேண்டும். “நன்மை கடைப்பிடி” என்பது மூதுரை. நன்மையாவது மக்களை மக்களாகச் செய்வது எதுவோ அதுவேயாம். அதாவது, மக்களாவார் அறிவிற் சிறந்த பகுதியினர். அறிவு பெற்றதின் நோக்கத்தை நன்முறையில் ஆழ்ந்து பயன் பெற்றாரே, பெற முயல்வாரே, மக்களாவார்.

> “அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
> தந்நோய்போல் போற்றாக் கடை”

என்கிறார் வள்ளுவனார்.

ஆகவே, தமக்கு வரும் துன்பத்தையும் போக்கிக் கொண்டு பிறர்க்கும் துன்பம் வாராமல் காப்பதே சிறந்த குறிக்கோளாகும். இத்தகையோரே, மக்களுள் மக்களாவார்.

இத் தகையோரில் ஒருவராய் - ஒப்பற்றவராய்த் திகழ்ந்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

> “உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
> அற்றே தவத்திற்கு உரு”

என்னும் வாய்மொழிக்குப் பேர் இலக்கியமாக விளங்கிய பெரியாருள் ஒருவர்.

இவருடைய வாழ்க்கை ஒரு பெருங் குறிக்கோளினை உடையது.

சமயங்களுள்ளே பல்லாற்றானும் சிறந்தது எனச் செந்தமிழ் நாட்டுச் சமய ஆராய்ச்சி வல்லுநரானும் மேனாட்டுச் சமய ஆராய்ச்சி வல்லுநரானும் காய்தல் உவத்தல் இன்றித் "தன்னெஞ் சறிவதனைப் பொய்யாது" எடுத்துக் கூறப் பட்டது சைவ சமயமேயாம். இத்தகைய சைவ சமயத்தில் பிறந்து, பல்லாற்றானும்—நூலாராய்ச்சியானும், பிறசமயம் சார்ந்து ஆங்குப் பெற்ற உண்மை அனுபவத்தானும், மீண்டும் சைவசமயம் சார்ந்து சிந்தித்த அனுபவத்தானும்—உண்மையை நாடிச், சைவ சமயமே துன்பத்தைப்—பிறவித் துன்பத்தைப்—போக்கவல்லது என்று கண்டு,

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற"

என்ற வள்ளுவர் வாய்மொழியைக் கடைப்பிடித்துத், தாமும் அச்சமய வாழ்வில் நின்று துன்பம் நீங்கிப், பிறரும் துன்பம் நீங்கி இன்பமுறத் தம் வாழ்க்கையை நடத்தியவர். அவர் பிற்றோன்றலாராகிய எம்போன்றாரும் அறிந்து உய்யும் வகை, தம் நெஞ்சறிந்ததை—தாம் மெய்யென்று கண்டதைத் தேவாரத் தெய்வத் தமிழ்த் திருமறையானும் அருளிப் போந்தவர்.

ஆகையால், துன்பத்துள் எல்லாம் துன்பமாவது பிறவித் துன்பம் ஒன்றே. இதைப் போக்கிக் கொள்ளப் பல வகையில் மக்களுக்கு அரண் செய்வது அவருடைய வாழ்க்கை வரலாறு. அதைச் சித்தாந்த சமயக் கண் கொண்டு திருவருள் துணைகொண்டு காண முயல்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

திருநாவுக்கரசு சுவாமிகள், நடு நாட்டில் திருஆமூரில் வேளாண் குலத்தில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் தவப் புதல்வராய்த், திலகவதியார்க்குப் பின், 'மருணீக்கியார்' என்னும் இயற்பெயரோடு விளங்கினார். கற்றுத் துறை போயினார்.

இறைவன் திருவருள் முறைப்படி, தந்தையாரும் தாயாரும் இவ்வுலக வாழ்வை நீத்தார்கள். பின் திலகவதி

யாருக்குக் கணவனுராக முடிவு செய்யப்பட்டிருந்த கலிப் பகையாரும் அரசனுக்காகப் போர்முனை சென்று வீர சுவர்க்கம் அடைந்தார். அது அறிந்த அம்மையார் உயிர் துறக்கத் துணிந்தும், "தம்பியார் உளராக வேண்டுமென வைத்ததயா"வினுல், அவர் வேண்டுகோட் கிணங்கி "உயிர் தாங்கி அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி" மனையிருந்து தவ நெறி மேற்கொண்டு ஒழுகிவரலாயினர்.

மருணீக்கியார், உலகத்தியல்பு நிலையுதல் இல்லாதது என்று உண்மையில் கண்டு, சமய ஆராய்ச்சியில் தலைப்பட்டனர். இங்கு, "நல்லாறு தெரிந்துணர நம்பர் அருளாமையினுல்" சமண்சமயம் புகுந்தார்.

ஈண்டு மக்களாவார் அறியத்தக்கது, நூல் பல கற்று, நுண்ணறிவு படைத்தோராயினும், இறைவன் திருவருளையின்றி யாதொன்றையும் உள்ளவாறு அறிந்துவிட முடியாது என்னும் உண்மையே யாகும். திருவருளையின்றி அமையாதது மக்கள் வாழ்க்கை. அதை உணர்ந்தே ஆண்டவனை என்றும் மக்கள் மனமொழி மெய்களால் வழிபடவேண்டும். இது முதல் உண்மையாகும். அறிவு பெற்றதின் பயனுமாகும்.

தம்பியாருக்காக உயிர் தாங்கியிருந்த அம்மையார், அவர் செயலுக்கு மனம் வருந்தித், திருவதிகையை அடைந்து, ஒரு மடம் சமைத்துக்கொண்டு, கைத்தொண்டு செய்து, நாளும் இறைவனிடம் "அடியேன் பின் வந்தவனை ஈண்டு வினைப் பரசமயக் குழிநின்றும் எடுத்தாளவேண்டும்" என விண்ணப்பஞ் செய்து வந்தனர்.

ஈசர் அருள் கைகூடும் காலமும் நேர்ந்தது. அம்மையார் விண்ணப்பத்தை இறைவன் திருச் செவி யேற்றுச், "சூலை மடுத்து ஆள்வம்" என்று கனவிடைத் தெரித்தருளி, அவ்வாறே சுவாமிகளுக்குச் சூலை நோயைத் தந்தருளினர். அது அவரை மிகவும் முடுகித் துன்புறுத்தியது. சமணர்கள் பல வகையிலும் அதை நீக்க முயற்சித்தும் பயன்படாமை கண்டு கைவிட்டனர்.

சுவாமிகள், இனி உய்யு நெறி யாது என்று சிந்திக்க, "ஈசர் அருள் கூடுதலால்," "இத்துயர் ஒழியச் சேவ்வாறு சேர் திலகவதியார் தாள்சேர்வன்" என உட்கொண்டு,

ஓர் இரவு யாரும் அறியாவகை, சமண் சமய சின்னங்களை விடுத்து, ஓர் ஏவலாளனைத் துணைகொண்டு திருப்பள்ளி யெழுச்சிக் காலத்தில் திருவதிகை அடைந்து திலகவதியார் திருவடிகளில் சரண் புகுந்தார்.

அம்மையாரும் இறைவனின் பேரருள் திறனை நினைந்து, "மூளும் அரும் துயர் உழந்தீர் ! எழுந்திரீர்" என மொழிந் தருளச், சுவாமிகள் எழுந்து மீண்டும் தொழ, அம்மையார் அருளிய உயர் உபதேச மொழிகள்:

(1) சூலை நோய் வந்தது இறைவன் அருளே
(2) திருவடிகளை அடைந்தாரது பற்றறுப்பார் இறை வனே
(3) அவரைப் பணிய வேண்டும்
(4) அவருக்குப் பணி செய்ய வேண்டும்
(5) திருநீற்றை அணிய வேண்டும்
(6) அஞ்செழுத்து ஓத வேண்டும்

என்பன ஆகும்.

இவைகளிலிருந்து சிவபெருமானைச் சிறப்புரிமையோடு அடைதற்குத் தீட்சை வேண்டும் என்கின்ற உண்மையை அறியலாம்.

தீட்சையானது உயிரினது ஆணவ மலத்தையும் மாயா மலத்தையும் கன்ம மலத்தையும் போக்கி, உயிரைத் தூய்மை யாக்கி, ஞானம் பெறுவதற்கு ஏதுவாய் முத்தி பெறச் செய்ய வல்லது என்பது மெய்ஞ்ஞானிகள் கண்ட அநுபவ மாகும். இவ்வுண்மை சுவாமிகள் வாழ்க்கையில் குறிப்பாற் காணப் பெறும்.

அம்மையார் தீட்சா குருவாக விளங்கினார்கள். அம்மை யாருடைய திருவடிகளில் வீழ்ந்தது திருவடி தீட்சையாம்; அம்மையார் தம்பியாரை நோக்கியது நயன தீட்சையாம்; சிவபெருமான் அருளை நினைந்ததே மானத தீட்சையாம்; சிவ பெருமானைப் பணிந்து பணிசெய்யவேண்டும் என்று கூறி யருளி, அஞ்செழுத்து ஓதித் திருநீற்றை அளித்தது வாசக தீட்சையாம்.

சுவாமிகள், ஆசாரியராகிய தமக்கையார் ஆணைப் படியே ஒழுகினர் என்பதை அவர் வாழ்க்கையில் பரக்கக் காணலாம்.

தீட்சையினுல் மாணுக்கனது அகத்திருள் நீங்கும் என்னும் சிறப்புண்மையை "நீறணிந்தார் அகத்திருளும்... மாறவரும் திருப்பள்ளி யெழுச்சி" என்னும் தொடரால் நம் தெய்வச் சேக்கிழார் புலப்படுத்துகிருர்.

தீட்சையானது ஞானத்தைப் பயப்பித்துச் சிவமாந் தன்மையைப் பெறச் செய்யும் என்பதைச் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய மறுமாற்றத் திருத்தாண்டகக் கருத்துக்களால் அறியலாம்.

முதற்பாட்டில், சிவபெருமானே முழு முதற்கடவுள்; அவரே உயிர்களை ஆளாக உடையவர்; அவருக்கே உயிர்கள் மீளா அடிமை; உலகப் பழக்கத்தை விட்டு, அவரை அடைதற்குரிய பழக்கத்தில் தலைப்பட்டால், உயிர்கள் வேறு யாருக்கும் குடியல்ல என்பதைக்காட்டிக் கடைசிப்பாட்டில் "என் குணத்துளோமே" என்று முடிப்பதிலிருந்து பல உண்மைகள் அறியக் கிடக்கின்றன.

இனி, ஆண்டவன் உயிர்களுக்குக் கருவி கரணங்களை உதவியது அரன் பணிக்கே என்னும் சித்தாந்தக் கருத்தைத் தம் பாடலில் பல இடங்களில் வற்புறுத்துகிருர். சிறப்பாகத் "திருஅங்கமாலை" இவ் வுண்மையைத் தெரிவிக்கிறது.

ஆசை விட்டாரே வீடு பெறலாகும் என்பதைத் திருப்புகலூரிலிருந்து உழவாரத் தொண்டு செய்த காலத்துப் பொன்னையும் மணியையும் ஓட்டையும் ஒக்க நோக்கியதனுலும், இறைவன் ஆணைப்படி பெண்கள் மயக்க முயற்சித்தபோது, தம் சித்த நிலைதிரியாது "நான் திருஆரூர் அம்மானுக்கு ஆளானேன்; நீங்கள் என்னைப் பகட்டமுடியாது" என்று "பொய்ம்மாயப் பெருங்கடலில் புலம்பாநின்ற புண்ணியங்காள், தீவினைகாள், திருவே" என்று தொடங்கும் தாண்டகத்தினுலும், "புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் பூம்புகலூர் மேவிய புண்ணியனே" என்ற தாண்டகத்தினுலும் நன்கு அறியலாம்.

ஆளுடைய அரசுகள் வாழ்க்கையில் மக்களாகிய நாம் அறிய வேண்டுவன பலவுள. ஆகையால் பெரிய புராணத்துள் அவர் சரித்திரப் பகுதியை அவர் தேவாரப்பாடலோடு இயைத்துப் படித்து இன்புறுவதோடு அமையாது, நம் வாழ்க்கையில் இயன்றவரை கடைப்பிடிப்போமாக ! இறைவன் திருவருள் துணை புரிவதாக !! நாவுக்கரசர் நல்லடி வாழ்க !!!

---

*சைவ சித்தாந்தம் வளர்ந்த வழி - மாணவருக்கு

(தி. கி. நாராயணசாமி) .

நம் நாட்டு மக்களில் பல வகுப்பினர் உள்ளது போல அவரவர் பழகிவரும் சமயங்களும் பலவாம். அவற்றுள், வழிபடும் கடவுள் வேறுபாட்டால் சைவம், வைணவம், சாக்தம் என வழங்கும் சமயங்களும் பலர் பழக்கத்திலுண்டு; காணபத்திய, கௌமார, சௌர சமயங்கள் அவை போலன்றி குறைந்து காணப்படுவன. இவற்றில் சைவம் வைணவம் இரண்டுமே தமிழ்நாட்டில் பழக்கத்திலிருப்பன. சக்தியை, கணபதியை, குமரனை, சூரியனை வழிபடுவோரும் தம் சமயம் சைவம் அல்லது வைணவம் என்பர்.

வேறொரு வகையால் வழங்கும் சமயங்களைக் குறிக்கலாம். வேதத்தின் முடிவில் உள்ள உபநிடதங்களால் குறிக்கப்படும் ஞானங்கள் அனைத்தையும் அமைத்து வியாசர் வகுத்த வேதாந்த சூத்திரத்திற்கு நாளடைவில் நான்கு பேருரைகள் ஏற்பட்டன. ஸ்ரீ கண்ட பாடியம் -

---

*எஸ். அனவரத விநாயகம்பிள்ளை, எம்.ஏ., எல்.டி. அவர்கள் 1909ல் எழுதி, ரிப்பன் அச்சகத்தார் வெளியிட்ட பதிப்பும் பிறவும் ஒருபுடைத்தழுவி இன்றுவரை தோன்றிய கருத்துகளை ஒழுங்கு செய்யப் பெற்றது.

சைவபரமாய் நீலகண்டர் செய்தது. சங்கரபாடியம் - ஏகான்மவாதத்தை நிறுவச் சங்கரர் செய்தது. இராமா நுஜர் வைணவ வழியாய் விசிஷ்டாத்வைத உரை கண்டார். மாத்வர் - துவைத பாடியத்தை வகுத்தார். இவற்றில் முன் இரண்டும் அத்வைதப் பேருரைகள்; பின் இரண்டும் துவைதபரமான உரைகள். ராமாநுஜர் உரையை விசிஷ் டாத்வைதமெனவும், மாத்வர் உரையை-துவைதமெனவும் சொல்லுவர். நீலகண்டர் உரை-சுத்தாத்வைதம். சங்கரர் உரை - கேவலாத்வைதம். அத்வைத சொல்லுக்கு இரண்டு அன்று, இரண்டு இன்று என்ற இருபொருள் உண்டு; அக் கருத்துகளை முறையே நீலகண்டர், சங்கரர் உரைகள் கடைப்பிடித்தன. நீலகண்டர், ராமாநுஜர், சங்கரர் கடவுளை முறையே சிவன், விஷ்ணு, பிரம்மம் என்றனர். நீலகண்டர் முப்பொருள்களை (பதி, பசு, பாசம்)யும், சங்கரர் ஒரே பொருளையும் கொண்டவர்கள்.

வேத காலத்திற்கும், வேதாந்த சூத்திரப் பாடியங்கள் தோன்றிய காலத்திற்கும் இடையில் சமயங்கள் அடைந்த மாறுதல்கள் பல. வேதங்கள் எழுதிய முனிவர்களில் ஒருவராகக் கருதப்படும் அகத்தியரைத் தலைமைத் தமிழாசிரி யராகக் கொள்ளுகின்றனர். அவர் சிவன், குமரன் என்ற கடவுளிடத்தும் தமிழ் கற்றார் என்பது புராணக்கூற்று. அகத்தியரது முதல் மாணாக்கர் தொல்காப்பியர். அவரது இலக்கண நூல் தொல்காப்பியம். அதற்கு முந்திய பழைய தமிழ்நூல் இன்று காணவில்லை. தொல்காப்பியர் தம் சமயத்தைக் குறிக்கவில்லை. ஆனால் அவர் சைவர் என்பது தமிழர்கொள்கை. பழந்தமிழ் ஆராய்வாரில் சிலர், ஆரியர் தமிழருட் போந்து இலக்கணநூல் வகுத்து நன்மை செய்தனர் என்பர். இது நாட்டு வழக்கினை ஒட்டியதா யினும், உண்மை அன்று. வடமொழி ஒன்றையே ஆராய்ந்தோரில் சிலர் வேதத்தில் சிவம் காணப்படவில்லை ஆதலின், ஆரியர் திராவிடரோடு கலந்தபின் தமிழ்க் கடவுளாகிய சிவனுக்கு வேதத்தில் இடம் தரப்பட்ட தென்பர். வேறுசிலர் அகத்தியர், தொல்காப்பியர், வேதம், ஆறு சாத்திரம், சூத்திரம் செய்தவர்கள் அனைவரும் தமிழரே என்றும், வடமொழியில் செய்ததால் அவர் ஆரியர்

ஆகார் என்றும் கூறுவர். அகத்தியர் தொல்காப்பியர் காலம் என்பது வேதங்கள் தோன்றிய காலம். 4000 ஆண்டுகளுக்கு முற்பட்ட இக் காலத்தை, தமிழ்ச்சங்கம் தோன்றி விளங்கிய காலமெனவும், அதில் முப்புரம் எரித்த விரிசடைக் கடவுளாம் மதுரைச் சொக்கர் புகழ்பெற்ற புலவர் என்பதும் கதை. " 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழர் " என்ற நூலில் சிவன் குமரன் முற்காலத்து மக்களுட் சிறந்தவர். அவர்கள் ஞானம், ஆற்றல் சிறந்து விளங்கி, நாளடைவில் வழிபாடு பெற்று இறுதியில் அவர் வரலாறு அனைத்தும் மறையவே அவர்கள் கடவுளர்கள் ஆயினர் என்று கொள்வதற்குப் பல சான்றுகள் உண்டு. சிவன், வடநாட்டில் திரிந்த துறவி ; க்ஷத்திரியர் அவர்க்குத் தம் பெண்ணை மணஞ்செய்து கொடுத்தனர் என்பது வங்க நாட்டு வழக்கு என்றுகூறும்.

சிவன் குமரன் மக்களாயிருந்து, ஞானம் அதிகரித்து ஞான சாத்திரங்கள் ஏற்பட்ட காலத்துச் சிவ வழிபாடு செய்வோர் கடவுள் நிலையைச் சிவன் முதலியோருக்குக் கொடுத்தனர். ஆனல் அவர்களைப் பற்றிய கதைகள் சீக்கிரம் மறைந்துவிடவில்லை. தத்துவ சாத்திரம் உணர்ந்த சமயவாதிகளில் ஒரு சிலர், கதைகள் சில உட்பொருள்களை விளக்கப் பண்டைக் காலத்து ஆன்ருேரால் படைக்கப்பட்டன எனக்கூறி, மக்கள் கடவுளரான வரலாற்றை மறைப்பர். சரித்திரம் வல்லார், அதனை மறுப்பர். உள்ளுறைக்காகப் படைக்கப்பட்ட பஞ்சதந்திரம், இதோபதேசம் முதலிய நூல்களில் காணப்படுவனபோன்று, நீதிகளை யுணர்த்தக்கூறிய கட்டுக்கதைகள் போன்றும் இராது, புராணங்களாகவும் சரித்திரங்களாகவும் வளர்ந்தது மாறுபாடானநிலை. அன்றியும், பிரபோத சந்திரோதயம் போன்ற நூல்கள் தத்துவங்களை விளக்கவெழுந்தன என்பது ஐயமின்றி அவற்றுள் கூறப்பட்டுக் கிடக்கும் பொருளால் அறியலாம். எளிய அறிவினரும் அவை உண்மை வரலாறெனமயங்கார்.

கடைச்சங்க காலத்தில் சைவ சமயம் உயர்நிலையில் இல்லை. அக் காலத்தை ஒட்டிப் பௌத்தமும் சமணமும் வளர்ந்தன. தேவார காலத்திலே சைவ சமயம் ஒன்று உண்டெனத் தெளிவாக ஏற்பட்டது. மற்ற சமயங்களோடு

வாதங்களும், வாதத்தில் பெற்ற வெற்றிகளால் சமயம் பரவுதலும் எளிமையாயின. தேவாரத்தில் சிவன் வரலாறு ஓதப்பட்டன. சைவசமயம் பக்திச் சமயமாக விளங்கிற்று. தேவாரத்திலும் திருவாசகத்திலும் பக்திச்சுவை மலிந்துள்ளது. வீடு எய்துவதற்கு ஏதுவாகிய தத்துவஅறிவு அமையத் தேவார திருவாசகங்கள் நின்றதால் அவைகளை உபநிடத சாரம் என்பர். தேவாரத்தினும் திருவாசகம் ஞானத்தை மிகத் தெளிவாகக் காட்டும். தேவார திருவாசகங்கட்குச் சிறப்பு அவற்றின் ஆசிரியரால் உண்டாயிற்று. நால்வரும் பக்தித் தலைவர்களாய், புறச் சமயங் களைந்து சைவ சமயத்தை நிலைநிறுத்தினதால் அவர்கள் அருளிய தோத்திர நூல்கள் பாராயணத்திற்கு ஏற்றதாயின. ஏற்ற அவற்றை நாளும் படித்துப் பூசித்தலே அன்றி அவற்றை ஆராய்தல் என்றும் இல்லை. அவற்றிற்குப் பொருள் கூறுதல் தீவினை செயல் என்ற எண்ணம் இன்றும் தமிழ் மக்களிடத்து விட்டகலவில்லை. பட்டினத்தடிகள் பனுவல்கள் சிலவற்றில் தற்காலச் சைவ சித்தாந்தம் தத்துவ சாத்திரப்படி முதன் முதல் தெளிவாக எடுத்து ஓதப்பட்டுள்ளது. நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் பெருமான் சைவநூல்களில் பக்திச்சுவை மலிந்துள்ளது. ஆனால் சாத்திர உண்மைகள் நிறையப் பெறாமல் இருப்பன. கந்த புராணத்தில் சைவ சித்தாந்த சாத்திர உண்மைகள் நிரம்பவுள்ளன. வடமொழிக்கு வேதங்கள்போல, திருமுறைகள் தமிழ் மொழிக்குச் சிறந்தன. திருநெறித் தமிழ் என்றும் இதனை வழங்குவர். வியாசர் வேதங்களைத் தொகுத்தது போலத் திருமுறைகளை அழிந்துபோகாமல் காத்து அவற்றை ஒழுங்கு செய்த நம்பியாண்டார் நம்பிக்குத் தமிழுலகம் நன்றி காட்டக் கடமைப்பட்டுள்ளது.

(தொடரும்)

——

கந்தரனுபூதி

எதிரி விளையால் இழிந்த குடிக்கு

வளைபட்டகைமா தொடுமக்க ளெனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டெழு சூருரமும் கிரியும்
தொளைபட்டுருவத் தொடு வேலவனே.

பாட்டின் முதலில் கொடுத்துள்ள தலைப்பு ஏட்டுப் பிரதியில் கண்டது. பொதுவாக இப்பாடலுக்கு " துறவு பெற " என்பது தலைப்பாகக் கொடுக்கப்படுவது வழக்க மாக இருப்பதைக் காணலாம்.

" பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் " என்று திரு வள்ளுவர் கூறியவண்ணம் இதில் அடைய விரும்புவது துறவு. சில ஆண்டுகள் வேலை பார்த்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்வது போன்று, பொருளீட்டி அறம்பல செய்து இல்வாழ்க்கை செவ்வனே நடத்தி " யாக்கை நிலையாமை " என்ற காரணத்தால், மீண்டும் பிறவாமை வேண்டி மனைவி, மக்கள், மனையென்ற தொடர்ப்பாடுகளை நீக்கிப் பற்றற்றான் தாளிணையே பற்றிவாழ விரும்பும் நிலையே துறவு எனப்படும். அவைகளை நாமே நீக்குதல் ஆகாமியத்திற் கேதுவாம் என்று எண்ணி முருகனருளால் துறவு பெறவேண்டுமென்ற கருத்துக் கொண்டு இப்பாடல் பாடப்பட்டுள்ளது. "எதிரி வினையால் இழிந்த குடிக்கு " என்ற தலைப்பும் பிறவினை தம்மைச் சாராதிருக்க வேண்டு மென்பதேயாம்.

சூரபன்மனே தம் பல அண்டங்களின் ஆதிக்க வெறியை விடுத்துத் தானெனும் அகந்தை நீத்து முருகன் பால் சேவலும் மயிலுமாக விளங்க வேண்டுமென்ற எண் ணங் கொள அவனுடைய மார்பைத் தொளைத்த வேலா யுதத்தை யுடையவனே! கிரௌஞ்ச கிரியையே பிளந் தெறிந்த வேலாயுதத்தையுடையவனே என்று பின்னிரண்டு அடிகளால் முருகனை விளிக்கப்படுகிறது. சூரபன்மனுடன் ஒத்திட்டு நோக்குமிடத்து அடியேன் கொண்டுள்ள பந்தம் ஒரு சிறிதேயாகும். மாதொடு மக்களெனும் பந்தங்க ளிரண்டேயாகும். மனமோ கிரௌஞ்சகிரியைப்போன்ற அவ்வளவு உரம்பெற்றதுமன்று. உரம்பெற்ற பந்தத்துடன் பிணிக்கப்பட்டது மன்று. எனவே முருகா! வேலவனே! உனைத் தஞ்சமென்றடைந்த யான் எளிய தடைகள் பட்டு

அழியத்தகாது. மனைவி மக்களென்போர் எனைப்பந்தப் படுத்தி அழிக்க வொட்டாமல் காப்பாற்ற வேண்டு மென்ற விளிப்புடன் முதலிரண்டு அடிகளால் வேண்டப்படுகிறது.

"சாவா ரெல்லாம் என்னளவோ தக்கவாறன் றென்ஞரோ" என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுவது போல், எனையோரைப் போல் யானும் மனைவி மக்கள் சுற்ற மெனும் பேதைப் பெருங்கடலின் மூழ்கிக் கெடுவேனுகில் உன்னைத் தஞ்சமென்றடைந்ததன் பலன் என்னும்? அப் படிக் கெடுவது உன்னடியவர் பெரும் பேற்றுக்குத் தகுதி யல்லவே யென்றபடி.



மூலமந்திரம் — ஓம் குருங் கிறிங்
நைவேத்தியம் — தேங்காய், பழம்.

அருள் இயக்கம்

(ஔவை - சு. துரைசாமி, மதுரை)

மாற்பித்தியார் என்னும் சான்றோர் காட்டில் ஒரு பெரியவர் கடும் தவம் புரிவதைக் கண்டார். அவரை,

"கழைக்கண் நெடுவரை அருவி யாடிக்
கான யானை தந்த விறகின்
கடுந்தெறல் செந்தீ வேட்டுப்
புறந்தாழ் புரிசடை புலர்த்து வோனே"

என்று பாடினர். இது புறநானூற்றில் உளது. இதனைப் படிக்கும்போது, மலையருவியில் நீராடுவது பொருந்தும்; காட்டில் வாழும் யானை அவர்க்கு விறகு கொணர்ந்து உதவும் என்றும், அதைக் கொண்டு அவர் செந்தீ வேட்பர் என்றும் கூறுவது எங்ஙனம் என்று வியப்புண்டாகும். மேலும் விறகு தரும் யானையை அத் தொழிற்குப் பழக்கப் பட்ட யானை என்றற்கும் இடமில்லை; பழகியதாயின் அது வினைநவில் யானை என்று குறிக்கப்பட்டிருக்கும். இது பழகாத யானை காட்டு யானை என்பது நன்கு தோன்றக் கான யானை என்று திட்டவட்டமாகச் செப்புகின்றார். இப்போது இவ்வாறு தவம் செய்வோரையும் கான யானைகள் விறகு தந்து அவர்கட்கு உதவுவதையும் நாம் காண்பதில்லை. அதனால் இச் செய்தி நமது அறிவை அசைக்கின்றது. இது வெறுங் கற்பனையோ என்று நினைப்போமாயின், கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்னும் வேறொரு சான்றோரும்,

"செந்தீப் பேணியமுனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கும்
ஒளிறிலங்கு அருவிய மலைகிழ வோனே"

என இக் கருத்தையே எடுத்தோதுகின்றார். தொண்டைமான் இளந்திரையனைச் சென்று காணுமாறு பாணன் ஒருவனுக்கு, இளந்திரையனுடைய ஊரும் மலையும், ஊர்க்குச் சென்று சேரும் வழியும் உரைக்குமிடத்தே அவர் இதனைக் குறிக்கின்றார். ஆகவே, இதனை வெறுங் கற்பனை யென்று கொள்ளுவது அறமாக இல்லை; உண்மையை யாராயாது கற்பனை யெனப் புறக்கணிப்பது அறிவுடைமையாகவும் தோன்றவில்லை.

கல்வி கற்ற மக்களிடையே நம் நாட்டில் இப்போது விஞ்ஞான அறிவு ஓரளவு பரவி யிருக்கிறது. நாம் வாழும் நிலவுலகுக்குப் பொருளை ஈர்த்துப் பிடிக்கும் ஆற்றல் ஒன்று உண்டு என்பது மேனாட்டு விஞ்ஞானியான ஐசக் நியூட்டன் கால முதல் நாடெங்கும் தெரிந்திருக்கிறது. மேலும், வானத்தில் காணப்படும் நாண்மீண் கோண்மீன் அனைத்திற்குமே இந்த ஆற்றல் உண்டென்றும் விஞ்ஞானம் கண்டிருக்கிறது. மேனாட்டுக் கல்வியறிவின் பயனாய் இந்த அறிவு நமது நாட்டில் இப்போது நன்கு பரந்துளது. என்றாலும், இது தமிழ் மக்களில் பழந் தமிழ் நூல்களைப் பயின்ற

வர்களுக்குப் புதுமையாகத் தோன்றுது. பழைய நூல்களான தமிழ்ச் சங்க இலக்கியங்களில் ஞாயிற்று மண்டிலத்துக்கே இந்த ஈர்ப்பாற்றல் உண்டென்று சான்றோர்கள் குறித்துள்ளனர்.

"செஞ்ஞா யிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிதுநிலைஇய காயமும் என்றிவை
சென்று அளந்தறிந் தோர்"

என்பது அக்குறிப்பு. இதன்கண்ணும் காயமென்றது ஆகாயம்; அது காற்று இயங்காத வெற்றிடம் என்றற்கு வறிது நிலைஇய காயம் என்று கூறுகின்றார். இவ்வாறே வேறு சான்றோரும், "வளியிடை வழங்கா வழக்கரு நீத்தம்" (புறம் - 365) என்றும், "விசும்பு நீத்தம்" என்றும் குறித்துள்ளனர். இன்றைய வானநூல் அறிஞர் அனைவரும் இஃது உண்மையென உரைக்கின்றனர்; அமெரிக்க நாட்டு ஆராய்ச்சியாளர் வானவூர்திகளிற் பறந்து சென்று அந்த உண்மையைத் தெளிந்துள்ளனர். இவ்வாற்றால் ஞாயிற்றுக்குப் பரிப்பு என்ற ஈர்ப்பாற்றல் உண்டெனப் பண்டையோர் குறித்தது உண்மையை அடிப்படையாகக்கொண்டதென்பது தேற்றம்.

இனி, பரிப்பு என்னும் சொல்லின் பொருள் இதுதானு என்றோர் ஐயம் சிலர் உள்ளத்தில் எழலாம். ஞாயிற்றின் பரிப்பு என்பதற்கு உரை வகுத்த புறநானூற்றுப் பழையவுரைகாரர் ஞாயிற்றினது இயக்கம் எனப் பொருள் கூறி, "பரிப்பு என்றது இத்துணை நாழிகைக்கு இத்துணை யோசனை செல்லும் என்னும் இயக்கத்தை" என்று விளக்கமும் கூறினர். ஞாயிறு நிலவுலகத்தைச் சுற்றுகிறதென்னும் கொள்கை அக்காலத்தே நிலவியதனுல் அவர் இவ்வாறு கூறவேண்டியவரானர். இக்கால விஞ்ஞானிகளுள்ளும் அதனை முற்றிலும் மறுப்பவர் இலர்; ஞாயிற்றுக்கும் இயக்கமுண்டு; அது நிலவுலகு முதலிய வானுலகப்பொருள்கள் எல்லாவற்றையும்விட மிகமிகப் பெரிதாக இருத்தலால் ஏனைத் திங்கள் முதலியவற்றைப்போல இயக்கம் புலப்படத் தோன்றவில்லை என்பர். நிற்க, பரிப்பு என்னும் சொல்லுக்குத் தாங்குதல் என்னும் பொருள் உண்டு; "வாழும்

நாளினில் தமைப் பரித்தவரையும் வணக்கித் தாழும் நாளினில் சரண் என அவரையே சாரும், ஏழை" என்று பிற்காலத்து ஆன்றோரான செவ்வந்திப் புராணமுடையார் கூறுவதாலும், ஞாயிற்றின் செலவும் எனச் செலவு கூறிப் பின்னர் அஞ்ஞாயிற்றுப்பரிப்பும் எனக் கூறுதலாலும் தாங்குதல் என்ற பொருளே ஏற்றது என்பது விளங்கும்.

இப்பரிப்பினுல், ஞாயிறு, நாள்கோள் ஆகிய வானப் பொருள்களை ஈர்த்துப் பற்றித் தாங்குகிறது; அதனுல் அவை ஞாயிற்றைச் சூழ்வருகின்றன. அன்றியும், ஞாயிற்றின்பால் உள்ள இப்பரிப்பாற்றல் அதனைச் சூழ்வரும் நிலவுலகு முதலியவற்றிற்கும் பாய்கிறது. அதனுல் நிலவுலகைத் திங்கள் மண்டிலம் சுற்றி வருகிறது. நிலத்திலுள்ள பரிப்பு அதன் மேலே உள்ள பொருள்களை ஈர்த்துப் பிடித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு ஞாயிறு முதலிய கோள்களிடத்தே பரிப்பென்னும் ஈர்ப்பாற்றல் இயல்பாக அமைந்திருப்பதை நியூட்டனுக்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்பே நம்மவர் கண்டிருந்தாராயினும், அதன் உண்மை கண்டு அளந்து பயன்படுத்திய பெருமையும் அருமையும் மேனுட்டவர்க்கே உரியவை என்பதை யாரும் மறுக்க முடியாது.

நிலம் தனது பரிப்பாற்றலால் திங்களை ஈர்த்து நிற்பதனுல் அது நிலவுலகைச் சுற்றி வருகிறது. இவ்வாறு நிலம் பிற பொருள்களை ஈர்த்து நிற்பதுபோல் தன்னகத்தே உள்ள எல்லாப் பொருள்களையும் தன்னின் நீங்காதவாறு பரித்துக்கொள்கிறது. அதனுல், அது ஞாயிற்றைச் சுற்றி வரும்போதும் தன்னைத்தானே சூழ்வரும்போதும் நாமும் ஏனை எவ்வகைப் பொருளும் வானவெளியில் வீழ்ந்துபடாமல் தாங்கிக் கொள்கிறது. அன்றியும் அதன் பரிப்பாற்றல் நிலத்தின் மேலும் கீழும் உள்ள எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிப் பரந்திருக்கிறது. எல்லாப் பொருளிலும் என்றபோது எல்லா உயிர்ப் பொருளும் உயிரில் பொருளும் கருதப்படும். தம்மைப் பெற்ற தாய் தந்தையர் தூரத்தில் வரக் கண்டதும், குழந்தைகள் அவர்களை நோக்கிப் பாய்ந்தோடுவதும், மக்கள் வழங்காத நிலப் பகுதியில் தனித்துச் செல்பவர் மக்கள் வாழுமிடத்தைக் கண்டதும் அங்கே சென்று சேர்வதும் இந்தப் பரிப்பினுல் விளையும் பயனுகும்.

இப்பரிப்பு மாவும் புள்ளுமாகிய உயிர்களிடத்தும் காணப்படுகிறது. கொடுமை மிக்க விலங்குகளும் பிறவும் தத்தம் இனத்தோடு கூடி யிருப்பதும் இதனுலேயாம். உயிரில் பொருள்களாகிய கல், மண், நீர் என்ற யாவும் சிறு சிறு அணுக்களால் ஆகியவை. அவை தம்மில் கூடிச் செறிந்து கற்பாறைகளாகவும் நீர்ப்பெருக்காகவும் உருக்கொண்டிருத்தற்கும் ஒவ்வொன்றின்கண்ணும் ஊடுருவி நிற்கும் பரிப்பாற்றலே ஏதுவாகும். உயிர்களிடத்தே நிலவும் பரிப்பை அன்பு என்றும், உயிரில் பொருள்களிடத்தே நிலவுவதைப் பரிப்பு என்றும் விஞ்ஞானம் கூறுகின்றது. இதனுல், ஈர்ப்பு அல்லது பரிப்பு எனப்படும் இவ்வியல்பு எல்லாப் பொருளிடத்தும் கலந்து நிற்பதொன்று என்பது தெளியப்படும்.

பொருள்களிடத்தே காணப்படும் பரிப்புக்கு முதல் நிலவுலகு என்பதும், நிலவுலகும் ஏனை நாள் கோள்களைப் போல வானத்தில் சுழன்று திரியும் பொருளாதலால் இதற்கு ஞாயிற்றின் பரிப்புக் காரணம் என்பதும் முன்பே கூறப்பட்டன. ஞாயிற்றை ஆராய்ந்த விஞ்ஞானிகள் அதுவும் சுழலுகிறதென்று சொல்லுகின்ருர்கள். நமது நிலவுலகுபோல ஞாயிறும் சுழலுவதோர் பொருளாயின் அதனை ஈர்த்துப் பற்றிச் சுழல்விக்கும் பொருள் ஒன்று வேறே இருத்தல் வேண்டும். இவ்வண்ணமே நுணுகி நோக்கின் ஞாயிறு முதலிய எல்லாப் பெரும் பொருட்கும் வேருய் மேலாய் ஏனை எல்லாவற்றையும் ஈர்த்துக்கொண்டு நிற்கும் முழுமுதற் பொருள் ஒன்று உண்டு என்பதும், அதன் சூழ்நிலையில், பரிப்பில், எல்லா வுலகுகளும் எல்லாப் பொருள்களும் ஈர்ப்புண்டு நிற்கின்றன என்பதும் நன்கு தோன்றுகின்றன. அந்த முழுமுதற் பொருளை நம் முன்னேர் சிவம் என்றும், அதன் பரிப்பை அருள் என்றும் குறிக்கலாம். அதன் இயக்கமே அருள் இயக்கமெனப் படும். அதனுல் இயக்கப்படாத பொருளோ, அதன் இயக்கத்துக்கு அகப்படாத பொருளோ யாதும் இல்லை. அதனை மெய்யுணர்வால் கண்ட காரைக்கால் அம்மையார், "அருளே உலகெல்லாம் ஆள்விப்பது" என்பர்; உமாபதி சிவனர், "அருளிற் பெரியது அகிலத்து வேண்டும் பொருளில் தலையிலது போல்" என்று உரைப்பர்.

ஒவ்வொரு பொருளிடத்தும் அமைந்து கிடக்கும் பரிப்பாகிய இந்த அருளை மனவுணர்வால் அறிந்து கொள்ளும் மாண்புடையது மக்களுயிர். ஏனைப் பொருள்போல அருள் வேருகப் பெறப்படுவதின்றி ஒவ்வொருவரிடத்தும் அமைந்து கிடப்பதால், அதனை நன்னெறிக்கண் ஆண்டு பயன் கொள்வது அறமென்ற கருத்துத் தோன்றவே திருவள்ளுவரும் " அருளாள்க " என்றும், " அருளாட்சி " என்றும் குறித்தருளினர். முழுமுதற் பொருளைச் சிவம் என்றும் அன்பு என்றும் சான்றோர் கூறுவர் ; அதனல், சிவமாகிய அன்பின் பரிப்பை அன்பு ஈனும் அருள் என்று தமிழறிஞர் மேற்கொண்டனர். "அருள் என்னும் அன்பீன் குழவி " என்று திருவள்ளுவனரும் குறித்தருளினர். இவையெல்லாம் அடங்கக் கண்ட திருமூலர்,

" அருளே சகலமும் ஆய பவுதிகம்
அருளே சராசர மாய அமலம்
இருளே வெளியேஎனும் எங்கும் ஈசன்
அருளே " என்றும் இனிமையாக இசைக்கின்றர்.



முழு முதற் பொருளிடத்திலிருந்து பாயும் பரிப்பு அதனை இயக்கும்; அதனால் ஞாயிற்றின்பால் தோன்றும் செலவும் பரிப்பும் நிலத்தையும் திங்களையும் இயக்குகின்றன. இதனை மேலே காட்டிய படத்தில் தெளியக் காணலாம். இவ்வாறே முழு முதலாகிய சிவத்தின் அருளாகிய பரிப்பினால் நம்முடைய உயிரும் உடலும் இயங்குகின்றன. அருளால் பரிப்புண்டு நிற்கும் உயிர் ஞாயிறு போலத் தானும் இயங்கித் தன்னைச் சூழ்ந்து தாங்கும் உடற்கூறுகளையும் இயக்குகிறது. அதனால் உயிர் உள்வழிக் காணப்படும் வளமும் ஒளியும், அது நீங்கியபோது உடலிடத்தே அவை காணப்படாமற் போகின்றன. உயிரும் உடம்பும் பரிக்கப்



படும் திறத்தை இப்படத்திற் காணலாம். உடம்பின் பரிப்பினால் உயிரும் ஈர்க்கப்படுவதனால், "துன்பம் உழத்தொறும் காதற்று உயிர்" என்று திருவள்ளுவனாரும், "உடம்பொடு உயிரிடை நட்பு அறியாதார், மடம்புகு நாய்போல் மயங்குகின்றாரே" என்று திருமூலனாரும் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

இனி, இந்த உயிர்க்கும் உடலுக்கும் இடையே மன முதலிய நுண்பொருள்கள் சான்றோர்களால் உணர்ந்துரைக்கப்பட்டுள்ளன. உடம்புக்கு முதற் காரணமான மாயையே மன முதலியவற்றுக்கும் முதல் என்பர். இதனைத் திருமூலர் "மனமாயை மாயை" என்றும், "மனத்து

விளக்கது மாயா விளக்கே ” என்றும் கூறுவது காண்க. மேனாட்டறிஞர் மனத்தை உடம்போடு சேர்க்காமல் அதனின் வேறாய் உயிரோடு ஒன்றிய பொருளாகக் கருது கின்றனர். இந்த மன முதலிய பொருள்களை உயிர்க்கென அமைந்த அகக்கருவி என்றும், அந்தக்கரணம் என்றும் நம்மவர் குறிக்கின்றனர். அகக் கருவியாகிய மனம் உயிருடம்புகளின் பரிப்புக்கும் திருவருட் பரிப்புக்கும் இலக்காகி நின்று உடலினகத்தும் புறத்தும் அது கறங்குகிறது. அதன் பரிப்புக்கு உயிரும் உடம்பும் அகப்பட்டு இயலும். இதனைப் பின்வரும் படத்தால் அறிந்து கொள்ளலாம்.



இனி, உயிரின்கண் கிளர்ந்தெழும் பரிப்பு உடம்பையும் மனத்தையும் இயக்குகிறது. அதனால் உயிர் மனத்தைக் கொண்டு நினைத்தலும் உடம்பைக் கொண்டு உரையும் செய்கையுமாகிய செயலும் செய்துகொள்கிறது. மனமும் உடம்பும் இல்லையானால் உயிர்க்குச் செயலில்லை; வினையில்லை. “ இருவினை என்பது என்னைகொல் அருளிய, மனமே காயம் வாக்கெனும் மூன்றின், இதமே அகிதமே எனும் இவை ” என்று அருணந்தி சிவனார் கூறுவதுகாண்க. மனத்தின்கண் நினைவு இயல்பும் வாய் உடம்புகளில் உரையும் செயலுமாகிய தொழிற் பண்பும் திருவருளின் பரிப்பியக்கமாகும்.

இதனால் உயிர் திருவருளியக்கத்தின் துணைகொண்டே மனம் உடம்பு ஆகிய கருவிகளை இயக்கி வாழ்க்கைத் தொழிலைச் செய்வது இனிது தெளியப்படும். திருமூலனாரும்,

" பாசத்தில் இட்டது அருள்அந்தப் பாசத்தின்
நேசத்தை விட்டது அருள்அந்த நேசத்தில்
கூசற்ற முத்தி அருள்அந்தக் கூட்டத்தின்
நேசத்துத் தோன்றா நிலைஅரு ளாமே ".

என்றும், " அருள் ஐங்கருமத்து அதிசூக்கம் உன்னார், அருள் எங்கும் கண்ணானது ஆர்அறிவாரே" என்றும் குறித் தருளினார். இதைத் தான் "அழிப்பு இளைப்பாற்றல்" என்ற சிவஞான சித்தித் திருவிருத்தத்தில், " பார்த்திடின் அருளே எல்லாம்" என்று அருணந்தி சிவனார் முடித்துக் காட்டினார்.

இதுகாறும் கண்டவற்றால் உயிரும் மனமும் உடம்பும் தம்மில் ஒன்றினொன்று ஈர்ப்புண்டு இயங்குதற்குத் திரு வருளின் பரிப்பியக்கமே இன்றியமையாத முதல் என்பது கண்டோம். சுருங்கச் சொல்லுமிடத்து, திருமூலர் அருளி யது போல நாம் " அருளில் பிறந்திட்டு அருளில் வளர்ந் திட்டு அருளில் அழிந்து இளைப்பாறி " வாழ்கின்றோம் என்பது தெளிவாம். உயிர் என்பது யாது? உணரும் தன்மையும், அறிவு விழைவு செயல் என்ற மூவகை ஆற்றலு முடைய ஒரு பொருள். திருவருளின் பரிப்பால் இம்மூன்று ஆற்றலும் உயிர்ப் பொருளின்கண் கிளந்து நின்று செயற் படச் செய்யும். எல்லா அண்டங்களையும் பொருள்களையும் பரித்து இயக்கும் திருவருளின் பேராற்றல் அளப்பரும் தன்மை வாய்ந்தது. உயிர்ப் பொருளின் ஆற்றலை நோக்க அது மிக மிக உயர்ந்திருத்தலால் அதன் வேகம் கெடுத்து ஆள்வதற்கென மூன்று வகைத் தத்துவங்கள் உயிரைச் சூழ்ந்து நிற்கின்றன. அவை வித்தை, அராகம், கலை என்று பெயர் கூறப்படுகின்றன. திருவருள், கலையின் வாயிலாகச் செய்கையாற்றலும், அராகத்தின் வாயிலாக விருப்பமும் வித்தை வாயிலாக அறிவாற்றலும் உயிரின்பால் எழச் செய்கிறது.



இவ்வாறு நிலவும் திருவருள் இயக்கத்தால்தான் உயிர் உடம்பொடு கூடி மன முதலிய கருவிகளையும் உடலையும் கொண்டு உடலில் வாழ்வு நடத்துகிறது. வாழ்வாவது மன முதலிய கருவி வாயிலாக அறிவன அறிந்தும் செய்வன செய்தும் நுகர்வன நுகர்வதாம். இந்நுகர்ச்சி முதலிய வற்றால் உயிரைப் பற்றியிருக்கும் அறியாமை நீங்க அறிவு விளக்கமும் தூய்மையும் பெறுகிறது. அறிவு விளக்கம் பெற்ற உயிர், உலகின் இயல்பும் உடம்பு மனங்களின் இயக்கமும் யாவும் திருவருட் பரிப்பு என்பதைத் தெளிந்து அத்திருவருளில்* தன்னை அழுத்தி யான் எனது என்ற பற்றின்றி நிற்கும். அதனால் உயிரின் நினைவு செயல் யாவும் திருவருளின் செயலாகி விடும்; அப்போது திருவருட் செல்வனை சிவன் அதனைத் தானாக்கித் தன் திருவடிக் கீழ் நிறுத்துவன். இதனைத் திருஞான சம்பந்தர்,

"..................முக்குணங்கள் வாய்
மூடா வூடா நாலந்தக் கரணமும் ஒருநெறியாய்ச்
சித்திக்கே உய்த்திட்டுத் திகழ்ந்த மெய்ப்பரம் பொருள்
சேர்வார் தாமே தானாகச் செயும்அவன் உறையுமிடம்
கத்திட்டோர் சட்டங்கம் கலந்திலங்கு நற்பொருள்
காலோ ஓவாதார் மேவும் கழுமல வளநகரே"

என்று பாடி யருளுகின்றார்.

மக்களுயிர் மனவுணர்வால் ஏனை எல்லா வுயிர்களினும் சிறந்த மாண்புடையது. எனினும் அதன் உடம்பு, "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாய்" இருந்து விலங்கு நிலையெய்திப் போந்தது; அதனால், பழம் பிறப்புக்களில் இருந்து வந்த பழக்கத்தால் உடம்பின் பரிப்பு இளமைக்கண் மக்களின் உயிரையும் மனத்தையும் ஈர்த்துத் தன்பாற்படுத்தித் தன் வழியே நிற்கப்பண்ணும். அச்செய்கையால் உடம்புக்கு வளர்ச்சியும் வேறு உடம்புகளைப் படைக்கும் செய்கையும் உண்டாகின்றன. அப்போது, அப்பரிப்பின் வேகத்தை அடக்கியாளும் வன்மை பெறும் உயிர் மனத்தையும் உடம்பையும் தன் வசமே நிறுத்தித் தன்னை இயக்கும் திருவருள் உண்மை யுணர்ந்து அதன்வழி நிற்குமாயின் பிறவிப் பயனாகிய அறவாழ்வும் வீடுபேறும் பெற்று இன்புறும். அதன் நினைவு முற்றும் திருவருளையே எண்ணி,

" அருளே உலகெல்லாம் ஆள்விப்பது ஈசன்
அருளே பிறப்பறுப்ப தானால்—அருளாலே
மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையேன் எஞ்ஞான்றும்
எப்பொருளும் ஆவது எனக்கு "

என்று பாடிப் பரவுவதிலே ஒன்றி யிருக்கும்.

இவ்வண்ணம் ஒன்றியிருந்ததனால், திருவருள் இயக்கத்தின் வழி நிற்கும் கானயானையும் ஏனைக் கொடு விலங்குகளும் அருஞ்செல்வர்களான தாபதர்கட்கு விறகு கொணர்ந்து உதவுவது இயற்கையறமாதல் இனிது விளங்குகிறது. ஆகவே, மாற்பித்தியார் பாட்டில் கண்ட கானயானையின் செயல் அறிவுக்குப் பொருந்துவதென்பது மேற்கொள்ளற்பாலதாகிறது.

———

பொய்க்கால் குதிரை

திரு. சி. எம். இராமச்சந்திரன் செட்டியார், பி.ஏ., பி.எல்.

(மலர்-31 ; இதழ் - 7; 254-ம் பக்கத்தொடர்ச்சி)

சில ஆண்டுகளுக்குமுன் அதே வாரத்தாளில் பாரியூர் அம்மன் கோயில் சிற்பங்களைப்பற்றி ஒரு கட்டுரை வெளி வந்தது. அக்கோயில் அண்மையிலே திருப்பணி செய்யப் பட்டதாகும். கோபுரத்தில் கோபுரந்தாங்கிகள் என்ற உருவங்கள் சிற்பியின் ஆற்றலுக்குத்தக்கபடி தீட்டப்படுவ துண்டு. இந்தக் கோயிலில் ஒரு வாலிபனும் ஒரு மங்கை யும் துடுப்பு வைத்துக்கொண்டு கைப்பந்து ஆடுகிறதைப் போல் செய்து வைத்திருக்கின்றனர். அதைப் பற்றி எழுதின கட்டுரையாளன் தேவர்களும் பந்து ஆடுகிறார்கள் (Tennis) என்று எழுதினான். மேலும் கோபுரத்தில் காந்தியடிகளின் உருவம் அமைக்கப்பட்டிருந்தது. அதனைப் பார்த்துக் காந்தியைத் தெய்வம் ஆக்கித் தொழுகிறார்கள் என்று கேலியாக எழுதியிருந்தான். இவ்வாறு நமது நம்பிக்கைகளில் இல்லாதவற்றைக் கற்பித்துக் குறைகூறு வது சிலருக்கு இயல்பாகிவிட்டது.

மற்றொரு ஜெர்மன் நாட்டுப் பட நூலில் இந்தியச் சிற்பங்கள் எனக் குறித்து இரதிதேவியின் கற்சிலை பட மெடுத்து அதன் கீழ் சுப்பிரமணியக்கடவுள் என்று எழுதி யிருந்தது. தேவனுக்கும் தேவிக்கும் உள்ள உறுப்புப் பேதமும் அந்தப் பதிப்பாளருக்குத் தெரியவில்லை. மற்றோ ரிடத்தில் ஒரு படத்தில் தெருவில் விளையாடும் ஒரு பெண் குழந்தையைப் படமெடுத்து அதன்கீழ் இந்தியாவில் ஒரு நாளில் அரசு செலுத்தக்கூடிய இளவரசன் என்று எழுதியிருந்தது. அப்பெண் உருவம் அறைமூடி அணிந்த அம்மணத் தோற்றம் கொண்டிருந்தது. ஆண்பால் பெண் பால் இரண்டிருந்தது. வேறுபாடு அறியாத நிலையில் இவ்வெளியீடுகள் வேண்டுமென்றே பதிப்பிக்கப்படு கின்றன.

ஒருமுறை திருப்பேரூரில் ஆற்றங்கரையில் ஒரு வண் ணாத்தி சேலை துவைத்துக்கொண்டிருந்தாள். ஒரு அமெரிக்கப் பெண் பிரசாரகி அதனைப் படம் பிடித்தாள். இது எதற்காக என்று கேட்டேன். இந்துக்களின் வழிபாட் டிற்கு ஒரு உதாரணமாக எடுக்கிறேன் என்றாள். " இதில்

வழிபாடு ஒன்றுமில்லையே. இது துணி துவைத்தல்" என்று கூறியும் அவள் ஒப்பவில்லை. சில பிராமணப் பையன்களுக்குத் துட்டுகொடுத்து ஆற்றங்கரையில் நிறுத்திப் பூணூலைக் கையில் தூக்கிப் பிடிக்கும்படி செய்து படம் பிடித்தாள். இதனை அமெரிக்காவிற்கு அனுப்பினால் பணம் கிடைக்கும் என்றாள். இவ்வாறாகக் கற்பனைப் படங்கள் புகைப்படங்களாகப் பிடித்து இல்லாத காரணங்களைக் காட்டிக் கட்டுரை எழுதுவது மேற்கு நாட்டாரின் தொழிலாகிவிட்டது. இப்பித்தலாட்டங்கள் எல்லாம் ஒரு காலத்தில் கலைச்சான்றுகள் ஆகிவிடுகின்றன. நமது பண்பாடுகளும் கொள்கைகளும் அவமதிக்கப் படுகின்றன. இவைகளை நாம் தடுக்கவேண்டாமா?

பண்டைக்காலம் முதல்கொண்டே நமது பாரத கண்டத்தில் சேனைகளிலே தேர், யானை, குதிரை, காலாள் என்ற பகுதிகள் இருந்தன. நாளடைவிலே தேர் மறைந்தது. பிறகு யானையும் மறைந்தது. குதிரையும் காலாளும் போர்களில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டன. தமிழ்நாட்டிலும் குதிரைகள் அரசனுடைய இராணுவத்தில் ஒரு சிறந்த பகுதியாக இருந்தன. அரிமர்த்தன பாண்டியனும் யவனர்களிடம் குதிரைகளை வாங்கத் திருவாதவூரரை அனுப்பிய சரிதம் மிகப் பெயர்போனதே. இறைவனே பரிமேல் அழகனாக வந்ததை அறிவோம். இவ்வாறாகப் பாண்டியர் காலம் முதற்கொண்டே படைகளில் குதிரைச்சேவகர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். வடநாட்டிலிருந்து முகம்மதியர்கள் தென்னாட்டிற்கு வந்தபோதும் குதிரைப் படைகளைக் கொண்டு வந்து போர் புரிந்தார்கள். விஜயநகரப் படைகளில் குதிரைகள் இருந்தன. விஜயநகரத்தார் சிற்பங்களில் குதிரை வீரர் உருவங்களைப் பார்க்கிறோம். வேலூர், மதுரை, சீரங்கம், பேரூர் முதலிய கோயில் சிற்பங்களில் குதிரையேற்றத் துருவங்களைக் காண்கிறோம். போர் புரியும் காட்சிகளிலும் வேட்டையாடும் காட்சிகளிலும் குதிரை ஏற்றம் காண்கிறோம். இப்படியிருக்கத் தென்இந்தியாவில் 17, 18-ம் நூற்றாண்டில் முகம்மதிய ஆட்சி ஆர்க்காட்டில் ஏற்படவே அவர்கள் குதிரைகளை மிகவும் பயன்படுத்திக் கொண்டார்கள். ஆர்க்காட்டுப் போர்களிலும் செஞ்சிப் போர்களிலும்குதிரைகள் மிகவும் பயன் படுத்தப்பட்டன.

ஆர்க்காட்டுநவாபிற்கு எதிரிடையாக நின்ற தேசிங்குராசன் குதிரைஏற்றத்தில் மிகச் சிறந்தவன். அவன் குதிரையை வெகு சாமர்த்தியமாக நடத்தக் கூடியவன். அந்த முறையில் மிகப் புகழ்பெற்றிருந்தான். அவனுடைய குதிரைச் சவாரியைப் புகழும் நாட்டுப்பாடல், அச் செய்தியை வெகு உருக்கமாக வருணிக்கிறது. நீலவேணிக் குதிரை, பாராசாரிக் குதிரை இவைகளின் ஆடல்கள் மிகப் புகழ் பெற்றவை. எந்த நாட்டுப்புறத்தானும் அவைகளை மறக்க மாட்டான். ஆர்க்காட்டு மக்கள் அதனை வெகுநன்றாக அறிவார்கள். தேசிங்குராசன் கதையைப் பட்டுராஜாக்கள் ஆடிக்கொண்டு பாடுகையில் அதனை இரசிக்காத நாட்டுப் புறத்தான் இருக்கமாட்டான். இந்தப் பாடகர்களால் இச் செய்தி மிகவும் பரப்பப்பட்டது.

நவாப்பு அரசு மறைந்து போவதற்கு ஆங்கிலக் கம்பெனியார்களே பெரும்பகுதி ஏற்றனர். அவர்களும் குதிரைப் படையையே மிகவும் நம்பியிருந்தனர். ஐதர், திப்புப் போர்களிலும் குதிரைக்காரர்கள் என்றால் மக்களுக்குப் பெரும் பீதி. கம்பெனியார் தொடக்க நாளில் குதிரை வீரர்களின் கதை நாட்டில் மிகவும் வழங்கி வந்தன. அவைகளை விவரிக்கும் கதைகளைக் கேட்ட மக்களுக்கு உற்சாகம் மூட்டுவதற்குக் குதிரை வேடங்களைப் பூண்டு திருவிழாக்களில் ஆடிப்பாடும் வழக்கம் தொடங்கியது. தேசிங்குராசன் குதிரைமீது ஏறி வருவதைப் போலவும் அவனுடைய அரசி மற்றொரு குதிரையின் மீதுஏறி ஆடி வருவதைப் போலவும் வேடங்கள் புனையப்பட்டன. இந்த ஆட்டம் பெரும்பாலும் ஆர்க்காட்டு வட்டங்களில் முதலில் தொடங்கி யிருக்கலாம். இந்த ஆட்டம் ஆடும்போது கால் நோகாமல் இருக்கும் பொருட்டு மரக்கால் கட்டிக்கொண்டு ஆடியிருக்கலாம்.

மேலும் சுற்றிலும் இருக்கும் கூட்டத்தார்க்குத் தெரியும்படியாக நிற்பதற்கு வேண்டி ஒரு அடிமரக் காலாவது கட்டவேண்டும் அல்லவா? இந்த முறையில் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஏற்பட்டிருக்கவேண்டும்.

அக்காலத்தில் ஆர்க்காடு நவாப்புகளின் தலைமை நகரமாக இருந்ததினால் அங்கே குதிரையாட்டங்கள் பகல்வேடங்

கள்முதலியன மிகுதியாகப் போற்றப்பட்டன. தற்போதும் அந்தப் பகுதிகளிலிருந்துதான் இந்த ஆட்டக்காரர்கள் மற்ற நாடுகளுக்குக் கோடைக்காலங்களில் செல்லுவது வழக்கம்.

கம்பெனியார் ஆட்சி தொடங்கின காலத்தில் ஆர்க்காட்டுப் பகுதிகளில் பொய்க்கால் குதிரை ஆட்டத்தைத் தொடங்கி வைத்தவன் வாசுதேவ பண்டாரம் என்று கூறப்படுகிறது (தினமணிக் கதிர் 17-1-'54). அது முதற் கொண்டு இந்த ஆட்டத்தைப் பல குடும்பங்கள் குடித்தொழிலாகப் பழகி ஆடிக்கொண்டு வருகிறார்களாம். ஆகவே இந்த ஆட்டம் சுமார் இரண்டு நூற்றாண்டுகளாக நமது நாட்டில் பெருகிக்கொண்டு வந்திருக்கவேண்டும். அதற்கு முன்னர் நிஜக்குதிரை ஆட்டங்கள் இருந்திருக்கப் பிறகு பொய்க்கால் குதிரைகள் ஆயின. இதற்குப் பல காரணங்கள் ஏற்பட்டிருக்கலாம். தொடக்கத்தில் வெறும் களியாட்டங்கள் ஆகத் தொடங்கிய இவ்வாட்டம் தற்போது கோயில் திருவிழாக்களில் புகுந்துவிட்டது. இதைக்கண்டு தான் இந்தக் களியாட்டத்திற்குப் பண்டைய மேல் பூச்சு இட்டுச் சமயச்சார்பு கொடுக்கிறார்கள் போலும்.

இனி, கூத்துவகைகளில் மரக்கால் கட்டிக்கொண்டு ஆடுதல் நமது நாட்டில் வழங்கி வந்த பண்டை வழக்கம் என்று அறியவேண்டும். இதனைக் கூத்து என்ற தலைப்பில் உரையாசிரியர்கள் எழுதின விவரங்களால் அறியலாம்: அவைகளில் மரக்கால் கூத்து ஒன்று ஆகும். புராணக் கதைகளிலும் இது கூறப்பட்டுள்ளது. காளி கூத்து ஆடிய போது அதனைத் தடுப்பதற்காக அவுணர்கள் வஞ்சனை செய்து பாம்பு தேள் முதலியவைகளை ஆடுமிடத்தே ஏவி விட்டார்களாம். அவைகளைக்கண்ட காளி தன் காலுக்கு மரக்கால் கட்டிக்கொண்டு அவைகளை உழக்கிவிட்டுக் கூத்தாடினளாம். இப் புராணக் கதையினால் மரக்கால் கூத்து ஏற்பட்டதாம். அதுமுதல் மரக்கால் கூத்து மற்ற கூத்துக்களிலும் கொள்ளப்பட்டதாம். பொய்க்கால் குதிரைக் கூத்திலும் மரக்கால் கட்டி ஆடுவது இந்தக் கதையைப் பின்பற்றியதோ அல்லது முன் சொல்லிய வர்ணங்களைக் கொண்டோ தோன்றி யிருக்கலாம் அல்லவா?